# ஆராய்ச்சி

முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு என நான்கு பட்டங்களில் மாணவர்களும் ஆய்வாளர்களும் பயின்றும், ஆய்வுகள் நிகழ்த்தியும் வருகின்றனர்.

முதுகலை மாணவர்கள் இந்து,இசுலாம், கிறித்துவம் என ஏதேனும் ஒரு சமயம் சார்ந்த திருக்கோயிலைத் தெரிவு செய்து கள ஆய்வுகள் வழிதரவுகள் திரட்டி ஆய்வேடு அளிக்கின்றனர். இதன்வழி ஐந்நூறுக்கும் மேற்பட்டத் திருக்கோயில்களின் வரலாறுகள் துறையில் ஆவணப்படுத்தப் பெற்றுள்ளன. பண்டைய பல்லவ, பாண்டிய,சோழ, சேரமன்னர்கள், நாயக்கர்கள், நகரத்தார் காலத்திய சிற்பக்கலை, கட்டடக்கலை, அவற்றிலுள்ள நுணுக்கங்கள், கலைப்பணிகள் கண்டறியப் பெற்றுள்ளன. சில அரிய செய்திகள் மீட்டுருவாக்கம் செய்தளிக்கப்பெற்றுள்ளன.

கோயில்களில் நடைபெற்று வரும் திருவிழாக்கள் வழி தமிழ்ப் பண்பாட்டுச் சமய மரபுகளில் காணலாகும் பெரு-சிறு மரபுகளுக்கான வேர்நிலைகள் வெளிக்கொணரப் பெற்றுள்ளன எனும் சமய வழிபாட்டு முறைகளில் காணலாகும் சில உட்பிணைப்புகளும் நம்பிக்கைகளும் புலப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றால் மாணவர்களின் ஆய்வு மனப்பான்மையையும் திறனாய்வுப் போக்கையும் வளர்ப்பதுடன், பழைமையையும் பண்பாட்டையும் பாதுகாக்கும் துறையாகவும் தமிழ்த்துறை திகழ்கிறது. இங்ஙனம் நிகழ்த்தப்பட்ட திருக்கோயில் ஆய்வுகள் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

மேலும்,சங்க இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல், இதழியல் தொடர்பான ஆய்வுகளில் இத்துறை தனிக்கவனம் செலுத்தி வருகின்றது. ஒப்பிலக்கியம், மொழி பெயர்ப்பு போன்ற துறைகளிலும் மாணவர்களை ஈடுபடச் செய்து அவர்தம் பல்துறைப்பட்ட அறிவு வளர வகை செய்யப்படுகிறது. அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பாடத்திட்டத்தின் வழிப் பயின்ற மாணவர்கள் பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவிக்கான (**JRF**) இளநிலை ஆய்வாளர் தகுதிகாண் தேர்வில் தேர்ச்சி பெற்று நிதி உதவியுடன் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் முன்னாள் பிரதமர் ‘இராஜீவ்காந்தி’ பெயரில் மத்திய அரசு வழங்கும் ஆய்வு உதவித்தொகையைத் தகுதியடிப்படையில் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. விரிவுரையாளர் தகுதிகாண்(**NET/SET/Lectuership**)தேர்வில் இதுகாறும் 50க்கும் மேற்பட்டோர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மைசூரில் உள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனத்தில் (**CIIL**) ஆண்டுதோறும் தமிழ்த்துறை மாணவர்கள் பலர் பிற இந்திய மொழிகள் பயிலுவதற்கு நிதியுதவியுடன் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பட்டயங்கள் பெற்று மொழிபெயர்ப்பாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

பல்வேறு நிதிநிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெற்று முனைவர் / முனைவர் பட்டமேலாய்வு செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. **(UGC NET JRF / SRF- 12, UGC RGNF- 6, UGC-MANF-2, UGC .MAJOR PROJECTS – 1, CICT – 4,CIIL-NTS-2,**
**AURF- 2,ANNA CHAIR – 1,PDF – 5 )**

தற்பொழுது செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் **(CICT)** தேசிய நுண்தேர்வு மையம்**(NTS)** ஆகியவற்றில் இருந்து நிதியுதவி பெற்று முனைவர் சி.சிதம்பரம் முனைவர்.அ.சங்கர்தாஸ் ஆகியோர் முனைவர் பட்ட மேலாய்வை**(PDF)** மேற்கொண்டனர். தற்போது முனைவர்.எம்.மணிகண்டன் முனைவர் பட்ட மேலாய்வை**(UGC-PDF)** மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்த்துறைப்பேராசிரியர்கள் இதுகாறும் 596 கட்டுரைகளும், 35 ஆய்வு நூல்களும் வெளியிட்டுள்ளனர். துறை ஆசிரியர்களின் நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன.

துறையில் ஆண்டுதோறும் பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கங்கள், தேசியக் கருத்தரங்கங்கள் மற்றும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும், பயிலரங்கங்களும் தமிழாய்வை வளர்க்கும் விதத்தில் தமிழ்த்துறையில் தவறாது நடத்தப்பெறுவது குறிப்பிடத்தக்கது.